# புகழ்

பிரசித்திபெற்ற எழுத்தாளியும், நாவலாசிரியையுமான 'ரங்கநாயகி'யின் சொந்தப் பெயர் வேறு எதுவாயிருக்கும் என்பது பல வாசகர்களின் ஆர்வம். 'ரங்கநாயகி' என்னும் பெயர் சாதாரணமாகப் பெண்களுக்குக்கெல்லாம் இருக்கக்கூடிய பெயர்தானே? அப்படியிருக்க அதைக் 'கொடேஷனி'ல் போடுவானேன்? ரங்கநாயகி'யின் சொந்தப் பெயர் வேறு ஒன்று உண்டு என்பதுதானே இதன் குறிப்பு! அந்தப் பேர் என்ன? 'ரங்கநாயகி' என்னும் புனைப்பெயர் - அப்படியொன்றும் நாகரீகப் பெயர் இல்லவே! புனைப்பெயராக இதை தான் அவர் கொள்ளவேண்டும்? 'ரங்கநாயகி" இளம் எழுத்தாளியல்ல - வயதும் அனுபவம் முதிர்ந்த பெண்மணியாகவே தோன்றுகிறாள். பத்து வருஷமாக எழுத்தாளர் உலகத்திலே ஒரு நட்சத்திரமாகிவிட்ட பெண்மணி தான் - எனினும் அந்த நாளிலேயே அத்தனை பேர் நளினி, மாலினி என்ற ரீதியிலே உண்மைப் பெயர்களும் புனைப் பெயர்களும் புனைந்திருக்கவில்லை? இப்படியும் கவலைப்பட்டனர் பல ரசிகர்கள்.

'ரொம்ப மட்டமான பேர் போலிருக்கு, சொந்தப் பெயர்! வேம்பு, குப்பு என்று, ஏதாவது இருக்கும்! 'ரங்கநாயகி' என்ற பெயரே விசேஷமாகத் தோன்றியிருக்கும்!' என்று கற்பனை செய்தனர் ஆராய்ச்சி மனப்பான்மை அடைய சில வாசகர்கள்.

'ரங்கநாயகி'யின் எழுத்து வன்மையை மெச்சியவர்களும், அவளுடைய பறந்த விஷயதானங்களைக் குறிப்புடன் படித்தவர்களும் ஏராளமாக இருந்ததினால்தான் அந்தப் பெயர் அவ்வளவு விதமாக அனைவரையும் ஆட்டி வைத்தது. அதுவும் நாலு தினுசாக அடிபட்டது. 'பெயர்' என்று வரத்தொடங்கிவிட்டால் நாலு தினுசுமாகத்தானே புகழும் இகழுமாகப் பேர் முழங்கும்?

'ரங்கநாயகி' என்னும் புனைப்பெயர் யாரை எப்படிப் பேசவைத்தாலும், அந்தப் பெயரின் கீழே வரும் விஷயதானங்கள் மட்டும் உள்ளத்தைக் கவரும் விஷயதானங்களாகவே இருக்கும். எவரோ சிலர் கலையழகு அறியாமலோ, நுண்ணிய கருத்தழகு உணராமலோ சில சமயம் சில விஷயங்களை சுவைக்க இயலாவிடினுங்கூட, 'ஏதோ விசேஷம் இல்லாமற் போகாது!' என்று மனத்துள்ளே எண்ணினர்! அத்தனை தூரம் 'ரங்கநாயகி'யின் எழுத்துத் திறமை சிறப்பும் கவர்ச்சியும் பெற்றிருந்தது.

'ரங்கநாயகி' வசித்து வந்த ஊரிலே மட்டும் சிலருக்கு அந்தப் புனைப்பெயரின் மறைவிலே உள்ள உண்மைப் பெயர் தெரியும். எனினும் அவர்களுக்குங்கூட, "ரங்கநாயகி" என்ற நாகரிகமற்ற புனைப் பெயரின் 'மூலம்' ரொம்ப நாள் வரை தெரியாது. ரங்கநாயகியின் ஒரே பிள்ளை வளர்ந்து பெரியவனாகி, பிறர் அவனைக் கேட்ட கேள்விகளுக்கு விடையைத் தாயிடமிருந்து அறிய முற்பட்ட பொழுதுதான், 'ரங்கநாயகி' சொன்னாள்.

அவள் கணவர் பெயர் ரங்க சாயி, அவருடைய நாயகி இந்த ரங்கநாயகி!

இதை எப்படி பிறர் ஊகிக்க முடியும்? கணவர் ரங்கசாயிதான், கமலவல்லியின் இளமையிலேயே காலஞ்சென்றுவிட்டாரே!

'கணவனின் காதலியாக' இல்லற இன்பத்தின் உச்சாணியில் இருந்த அந்தப் பெண் 'மனைவி'யாக உண்மையான பொறுப்புள்ள பெண்ணாக மாறிக்கொண்டிருக்கும் துவக்கத்திலேயே, கைம்மையிலேயே புகும்படியாயிற்று! கமலவல்லி என்ற அழகிய பெயரைத் துறந்து, கைம்மையிலும் கணவனின் காதல் மனைவியாகி, 'ரங்கநாயகி' என்ற புனைப்பெயர் பூண்டு எழுத்துலகிலேயே நுழைந்தாள் அந்தப் பெண்மணி. இதை தொலைவிலிருந்தவர்கள் எப்படி அறிவார்கள்?

கமலவல்லியின் ஒரே மைந்தன் வாசுதேவனுக்கு அன்னையின் பால் அளவு கடந்த அன்பு. எழுத்துவன்மையிலும், பகுத்தறிவிலும் தன் தாய் அடைந்திருந்த மேதையிலே ஒரு சிறு துளி தான் அவனிடம் இருந்தாலும், தாயின் மேதையை ரசித்துணர்ந்தான் அவன்.

"'ரங்கநாயகி'யின் பிள்ளை நீ, சோடை போவாயோ?" என்று அவனைக் கல்லூரியில் மெச்சும்பொழுது, அவன் தாயின் கர்ப்பச் சிறப்புக்குத்தான் வந்தனங் கூறினார்கள் என்று அறிந்தும் மகிழ்ச்சியே கொண்டிருந்தான்.

காலப்போக்கிலே அவனும் வாழ்க்கையிலே புதிய அத்தியாயம் துவங்க வேண்டி வந்தது.

வாசுதேவனுக்குத் திருமணமாயிற்று. மனைவி மஞ்சுளா வந்த பிறகும் அவன் அம்மா பிள்ளையாகவே இருந்தான். அம்மாப் பிள்ளையாக இருந்து மனைவியிடம் அன்புக் குறைவாகவோ பரிவின்றியோ இருந்துவிடவில்லை, அவன். அப்படி அவன் இருக்க அவன் அன்னையே ஒப்பமாட்டாளே! பற்பல மன இயல்பு, பல குண விசேஷங்கள், பல ஆசாபாசங்கள் செறிந்த, நாவல்களும் காதற் கதைகளும் எழுதிய ஆசிரியை, பிள்ளை-நாட்டுப் பெண் மன உணர்ச்சிகளை அறியாளா? இங்கிதமின்றி இருப்பாளா? பெயரளவிலே அம்மா பிள்ளையாக இருந்தான். 'ரங்கநாயகியின் பிள்ளை', ஆனால் மனைவிக்கினிய கணவனாக இருந்தான். ஆசிரியை ரங்கநாயகி பிள்ளைக்கும் மருமகளுக்கும் இதம் செய்வதிலேயே கருத்துக்கொண்டிருந்தாள் - ஆனால் தன் பிள்ளையைப் பிறர் பெரும்பாலும் "ரங்கநாயகியின் பிள்ளை" என்றே குறிப்பிட்டு வந்ததையும், அவனுடைய மனது சற்று குறைகொண்டிருந்ததையும் அவள் அறிந்து கொள்ள முடியவில்லை. அறிந்திருப்பினும் அவள் செய்யக்கூடியது என்ன?

ஆம், வாசுவின் மனதிலே ஒரு குறை இருக்கத்தான் இருந்தது.

தலை தீபாவளிக்கு வேட்டகம் சென்றான் வாசு, "வருக ரங்ககுமாரரே!" என்று மாப்பிள்ளையை மாமனார் வரவேற்றார். அவரும் எழுத்தார்வம் படைத்தவர்!

அவருடைய இந்த அழைப்பு ஒரு தினுசாகத் தோன்றியது. அசட்டுச் சிரிப்பும் முடுக்குப் புன்னகையுமாக அப்பொழுது தன்னைச் சமாளித்துக் கொண்டு போவதிலே ஈடுபட்டுவிட்டான் வாசு. ஆனால் அன்று பிற்பகல் பேச்சுவாக்கிலே அந்த அசட்டு மாமனார் வாசுவிடம், "உங்கள் அம்மாவுக்காகவே, எனக்கு இந்தச் சம்பந்தம்தான் குறியாக இருந்தது!" என்றார்.

அவர் சொன்னதிலே உண்மை இருக்கலாம். மன இயல்புகள் அறிந்த பெண்மணி தன் பெண்ணின் மாமியாராக இருப்பது மிகவும் நல்லது என அவர் விரும்பியிருக்கலாம், அல்லது சம்பந்தியம்மாளையும் போற்றுவதாகக் காட்டிக்கொள்ளவே அவர் அப்படி இந்தச் சமயத்திலே கூறியிருக்கக்கூடும்.

ஆனால் வாசுதேவனின் அன்றைய மனநிலையிலே அந்தப் பேச்சு சற்று அதிருப்தியளிப்பதாயிருந்தது.

தன் பெண்ணுக்கேற்ற வரன் என்ற சிரத்தையுடன் அவர் தன்னை நாடி வரவில்லையா?

இதுதான் அவன் உள்ளத்திலே தலை தூக்கிய கேள்விக்கொக்கி. திருமணத்தின் மூலமாக பொறுப்புள்ள மனிதனாக மாறிவிட்டதாக எண்ணிப் பெருமிதமடைந்திருந்த அவனது ஆண் மனம் அவ்வாறு துணுக்குறுவது இயற்கையல்லவா?

மானிட இதயம் விந்தைகள் புரிவதல்லவா? அப்பொழுது ஏற்பட்ட துணுக்கத்தின் அதிர்ச்சி நின்றுபோனாலும், அஸ்ஸாம் பூகம்பம், அஸ்ஸாமின் பூகோளத்தையே மாற்றிவிட்டதுபோல, அவன் உள்ள நிலைமையும் சற்றே மாறித்தான் போயிற்று!

ஆனால், அதனாலெல்லாம் வாசுவிற்கு தாய்பால் கோபமோ வெறுப்போ வந்துவிடவில்லை. அன்னையிடம் மதிப்புப் போகவில்லை.

அவனுக்குப் பெண் பிறந்தது மறு வருஷம். அந்த மகவிற்கு அருமையாகத் தன் அன்னையின் பெயரையே இட்டான் - கமலவல்லி என்று பெயர் சூட்டி களிப்பெய்தினான்.

'ரங்கநாயகி' என்றே பெயரிடும்படி சிலர் சொன்னார்கள் ஆனால் வாசு இசையவில்லை. "அம்மாவின் அந்தப் பெயர் புத்தகங்களிலும், பத்திரிகைகளும் நிலைத்திருக்கும். சொந்தப்பெயர் நிலைக்க வேண்டாமா? என் பெண் 'ரங்கநாயகி' எப்படியாவாள்? 'ரங்கர் - பேத்தி' அன்றோ?" என்று கூறிவிட்டான் அவன்.

அவனுக்குத் தாயிடம் அன்போ கனிவோ குறையவில்லை. பிள்ளை ஸ்தானம் கழிந்து, கணவன் ஸ்தானம் பெற்று, தந்தையென்னும் ஸ்தானமும் பெற்றுவிட்ட அவனை, இன்னும் பலர் 'ரங்கநாயகி'யின் பிள்ளை என்றும் "ரங்க குமார்!" என்றும் குறிப்பிட்டதைத்தான் அவன் ஏக்கமுடன் ஏற்றான். அவனுக்கு என்று பெயர் இல்லையா? உத்தியோகமில்லையா?..... அவன் 'வாசுதேவன்' என்ற உருவிலே ஒளியுடன் இல்லையா?

சொந்த ஊரிலாவது நெருங்கியவர்களும் வேறு பலரும் 'வாசு', 'வாசு தேவன்' என்று கூப்பிட்டார்கள். ஆனால் அவன் வெளியூர்களுக்கு வேலை விஷயமாகப் போகும்பொழுது அங்கே பெரும்பாலானோருக்கு அவன் "பிரபல எழுத்தாளியான ரங்கநாயகியின் பிள்ளை", என்றுதான் அறிமுகம் செய்யப்படுவான். சில சமயம் அவன் பெயரைச் சொல்லியே அறிமுகம் செய்து வைப்பார்கள்; அடுத்தாற்போல விளக்கமாக, தாயின் பெயரையொட்டி உறவு விளக்குவார்கள். "அப்படியா?" என்று உடனே ஒலியும் ஒளியும் கிளம்பும் அவர்களிடையே. உள்ளேயிருந்து காபி, சிற்றுண்டி வரும்!

வாசுதேவனின் தந்தைக்குப் பெருமையிருந்திருந்தால்கூட இவ்வளவு தடபுடல் இருந்திராது நிச்சயம். "ரங்கநாயகி," பெண் - பெண்களிலே, எழுத்து வன்மைக்குப் பெயர் பெற்றவள். சாதாரணமாக ஆண்கள் புகழடைந்தால், ஆண்கள் மத்தியிலேதான் அவர்கள் பிரசித்தி ஓங்கியிருக்கும். பெண்கள் புகழ் அடைந்தாலோ பெண்களும் ஆண்களும்கூட, அந்தப் புகழ் உள்ள பெண்களை மறந்துவிடுவதில்லை!

வாசுவுக்கு, அவனுடைய பதவிக்காகவே அவனுடைய இயல்புக்காகவே - ஒரு ஸ்தானமும், ஆதரவும் இல்லாமற் போகவில்லை, ஆனால் அவனுக்கு உயர்வும், அவன்பால் கௌரவமும் 'ரங்கநாயகியின் பிள்ளை' என்ற விளக்கமான பெயராலேயே வந்தது! இந்த நிலையில்தான் அவனுக்குத் தன்னிடம் 'சொந்தமாக' உயர்வு ஏதும் இல்லையா என்ற ஏக்க வினா எழுந்தது. அவன் உணர்ச்சிகளைக் கொக்கிபோட்டு இழுக்கும் இந்த வினா.

நல்லுணர்ச்சி ஆட்டங் கண்டு விட்டாலும் பொல்லாவுணர்ச்சிக்கு இடங்கிடைத்துவிடவில்லை. அரசன் நோய்வாய்ப்பட்டால், அரசனைச் சேர்ந்த அதே உயர்வு படைத்த - ஒருவனுக்கல்லவோ அரசு சேரும்? வேலைக்காரனுக்குச் சேருமா?

இப்பொழுது வாசுதேவனின் மனதிலே வேறு ஒரு உயர்ந்த நோக்கம்.

தன் தாயினால் தன் பெயர் மூடிவிடப்பட்டதால் தனக்குப் பெருமைவராவிட்டாலும், தன் அன்னைக்குப் பெருமைதானே! அம்மாவுக்கே இருக்கட்டும் பெருமை - அதற்கு அவள் உரியவள்தான். ஆனால் தன் மக்களால் தன் பெயர் வெளிவர முடியாதா?

ஏன் முடியாது? குழந்தை கமலா நாட்டியத்திலே பெயர் பெற்றுவிட்டாளானால், 'இந்தக் குழந்தை தந்தையாகிய பாக்யசாலி யார்?' என்று எத்தனை இளந்தந்தைமார் ஆவலுறமாட்டார்கள்?

இந்த எண்ணமுடன் வாசுதேவன் தன் குழந்தை கமலாவிற்கு நாட்டியப் பயிற்சியளிக்கத் தொடங்கினான்.

ஆனால் விரைவிலே அவன் ஒரு உண்மையுணர்ந்து துணுக்குற்றான். அந்தச் சமயம் ஓரிரண்டு பெண் குழந்தைகள் நடனத்திலே சிறப்பு எய்தியிருந்தனர். அவர்களுடைய தந்தையரின் பெயர்களை அறிய நெடுநாள் ஆயிற்று அவனுக்கு. 'அவர் ஒரு ஐ.ஸி.எஸ். போலிருக்கு!' அவர் ஒரு புரோபஸர்!' என்ற ரீதியில் தான் தகவல்கள் கிடைத்தன!

'வாசுதேவனின் பெண்! என்று கமலாவை யாரும் கூறமாட்டார்கள் என்றும், 'கமலாவின் அப்பா' என்றுதான் தன்னைப் பெயரிடாமல் இனி அழைப்பார்கள் என்றும் ஒருவாறு கற்பனை செய்துவிடும் திறமை இருந்தது வாசுவுக்கு! 'ரங்கநாயகியின் பிள்ளை' யல்லவா அவன்?

ஆனால் வாசு தன் பெண்ணின் நாட்டியப் பயிற்சிக்குத் தடை போடவில்லை. குழந்தை கமலி, பேபி கமலினியாக உருவாகிக் கொண்டிருந்தாள். 'பேபி கமலினியின் அப்பா!' என்று தன்னைக் குறிப்பிட்டாலும், அதிலே தன் ஸ்தானத்திற்குச் சிறப்புக் கூடும் என்ற ஆறுதல் பெற்றுவிட்டான். இதற்கிடையிலே அவன் தாய் உலக வாழ்வை நீத்தாள்.

'அம்மா! உன் சொந்தப் பெயரக்கு நிலையாகக் கமலா இருக்கிறாள்! அவளையும் உன் போலவே புகழ் அடையச் செய்வது என் கடமை!' என்று தன் தாயின் ஆன்மாவிடம் கூறினான் வாசு. தன் பெண் நடனத் தேர்ச்சி பெறுவதிலே கருத்துக்கொண்டுவிட்டான்.

பேபி கமலினி 'அரங்கேற்றத்திற்குத் தகுதி' என்ற நிலையை எய்தினாள். வாசுதேவனின் நண்பர்களும் அக்கம்பக்கத்தவரும் 'வாசு பெண் கமலாவுக்கு அரங்கேற்றம் நடக்கப் போகிறது!' என்றும், 'வாசு பெண் இனிமேல் ஜம்மென்று பேபி கமலினியாகிவிடப் போகிறாள்!' என்றும், சொன்னார்கள். சிலர் "ரங்கநாயகி'யின் பேத்தி அரங்கு ஏறப் போகிறதாம்!" என்றும் கூறினார்கள். எனினும் வாசுதேவன், பிறர் பெரும்பாலும் தன் பெயரையும் பெண்ணின் பெயரையும் இணைத்தே முழக்கியதை உவகையுடன் ஏற்றான்.

கடந்த வருடம் பூதவுடல் நீத்த தன் அன்னையுடன் தன் பெண்ணைப் பிணைத்து சிலர் பேசியதையும் பக்தியுடன் செவியுற்றான்.

பேபி கமலினியின் அரங்கேற்றத்திற்கு முதல் நாள் இரவு வாசுதேவனின் மனதிலே அலாதிக் கிளர்ச்சி. தூக்கம் கொள்ளாமல் புரண்டுகொண்டிருந்த அவன் சட்டென எழுந்து 'டயரி'யை எடுத்தான், எழுதினான்.

"நாளை அரங்கேற்றத்திற்குப் பிறகு குழந்தை, பேபி கமலினி என்ற பெயரிலே முன்னேறத் தொடங்கிவிடுவாள்! அதற்குப் பிறகு என் தாயின் பெயரும் மங்கினாலும் மங்கிவிடக்கூடும்! என் அன்னையின் பெயர் 'பேபி கமலினி'யின் பாட்டி, முன்பு கதைகள் எழுதி வந்தாள்!' என்ற ரீதியிலே மாறிவிடக்கூடும்! ஆனால் அதற்காக?.....

குழந்தைக்கு நான் செய்ய வேண்டிய கடமையையொட்டி அவளை அரங்கிலே ஏற்றிப் புகழடையச் செய்யத்தான் வேண்டும்! பின் வாங்குவது சரியல்ல!" என்றுதான் எழுதியிருந்தான்.

கடந்த கால ஏக்கமும், வருங்காலக் கற்பனையும், அவன் உள்ளத்திலே ஏற்படுத்திய குழப்பத்தை, இந்தக் குறிப்பு வாங்கிக்கொண்டுவிட்டது. நித்திரை வந்தது வாசுவுக்கு.

அரங்கேற்றம் இனிது நடந்து கொண்டிருந்தது. வாசுவின் பக்கத்தில் இருந்த நண்பர் ஒருவர் ஹா ஹா காரம் செய்து அடிக்கடி மகிழ்ச்சி புலப்படுத்தினார் "உங்கள் அகத்திலேயே ஸரஸ்வதி தங்கியிருக்காள் ஸார்! உங்கள் அம்மா என்ன, நீங்கள் என்ன ...... எல்லாருமே ஒரு உயர்ந்த ஜாபிதா!"...... என்றார் அவர், தடபுடலாக.

தன்னிடம் உயர்வு எதுவும் இருப்பதாக இதுவரை யாரும் புகழ்ந்ததைக் கேட்டிராத வாசு, சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள விரும்பினான்.

"என்னையும் சேர்க்கிறேளே! சார்" என்னிடம் என்ன இருக்கு சிறப்பு?" என்று கேட்டான் அவன்.

"அதென்ன சார், அப்படி சொல்லிவிட்டீர்கள் நீங்கள்? உங்களிடமும் சரஸ்வதி இருக்கக் கண்டுதான், பெண்ணுக்கு இத்தனை சீக்கிரம் வித்தை பிடிபட்டிருக்கு! நீங்கள் சிரத்தை வைத்து, அவளிடமிருக்கிற திறமையை அறிஞ்சுண்டு நாட்டியம் சொல்லி வைக்காவிட்டால், வருமா சார், நாட்டியம், குழந்தைக்கு?" என்று புகழ்ந்தார் அவர்.

"உண்மைதான்!" என்ற பூரிப்பு வாசுவுக்கு ஏற்பட்டது, தன் மகள் மூலம் தன் குடும்பத்திற்கே சிறப்பு வந்துவிட்டது என்பதை அவர் பேச்சின் மூலம் அறிந்துகொண்ட வாசு, அகமகிழ்ந்துபோனான்.

அன்று மீண்டும் டயரியில் குறிப்பு எழுதினான். "அரங்கேற்றுவிழா இனிது நடந்தேறிற்று, குழந்தை கமலினி பெயரும் புகழும் சிறப்பும் அடையக் கடவுள் அருள்வாராக!"

அன்று அம்மாவுக்கு மட்டும் பெருமையிருந்தது ஆனால் எனக்கு ஒரு பெருமையும் இருக்கவில்லை - அதனால் குடும்பத்திற்குச் சிறப்பு ஏற்படவில்லை. இன்று கமலிக்குப் புகழ்; இதனால் என் குடும்பத்திற்கே கலைமகளின் அருள் இருப்பதாகப் புகழ் வந்துவிட்டது! இந்த இரண்டு தலைமுறைகளையும் பிணைக்கும் எனக்கும் புகழ்வாடை வீசிவிட்டது!" என்று குதூகலமாகக் குறிப்பு வரைந்தான் வாசுதேவன்.

இரண்டொரு நாட்களிலே, பத்திரிகைகளிலே பேபி கமலினியின் தாண்டவக் கோலமும் அரங்கேற்றுவிழாச் செய்தியும் வெளியாயின.

"எழுத்துலகிலே சரஸ்வதிபோல விளங்கிய காலஞ்சென்ற ஸ்ரீமதி 'ரங்கநாயகி'யின் பேத்தி பேபி கமலினி இன்று நாட்டிய உலகிலே ஒரு புது சிறு நட்சத்திரமாகப் பொலியத் துவங்குகிறாள். எழுத்துலகிலே பெண்கள் வெகு சொற்பமாக இருந்த காலத்திலே 'ரங்கநாயகி' தோன்றி மறுமலர்ச்சி எழுத்தாளிகளுள் சிறப்புப் பெற்றார். இன்று நாட்டிய உலகிலே பெண்கள் சொற்பமாக இருக்கும் சமயம் அதே கலைவாணியின் கலை அம்சமுடன் இந்தச் சிறுமி தோன்றியிருக்கிறார் என்று எண்ணுவோம்! இந்தச் சிறுமியிடம் அந்த உயர் மேதையை எதிர்பார்ப்போம்!"

இப்படி பல பத்திரிகைகள் வெளியிட்டன! இவற்றிலே வாசுதேவனின் பெயரே இருக்கவில்லை! அந்த ஒரு நாளோடு, ஒரு டயரிக் குறிப்போடு, தன் புகழ் அடங்கிவிட்டதாக வாசு வருத்தமுற்றான்.

இது நடந்து சில ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்பொழுது பாட்டி பேத்தி இருவர் பெயரும் தேய்ந்துவிட்டாலும் வாசுதேவன் முன்போலவே இருக்கிறான்!

**********

(சுதேசமித்திரன். செப்டெம்பர் 17, 1950)